தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 46/ந/2024

நாள். 22.10.2024

| | | |
|---|---|---|
| திரு..செந்தில்குமார்,<br>போடிநாயக்கனூர். | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>போடிநாயக்கனூர் நகராட்சி | – | எதிர்மனுதாரர் |

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், 2–வது தெரு, நந்தவனம், தேவிராஜ் இல்லம், கதவு எண்.27/15 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு. G.செந்தில்குமார் என்பவரின் 30.01.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில 01.02.2024 அன்று பெறப்பட்டு, 46/ந/2024 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், 2–வது தெரு, நந்தவனம், தேவிராஜ் இல்லம், கதவு எண்.27/15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.செந்தில்குமார் என்பவர் தமது 30.01.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

சுப்பா நாயக்கர் கீழ சந்து (என்ற) மன்னர் திருமலை சந்து நகராட்சி சந்தாகும். இந்த சந்துப்பகுதி நகர புல வரைபடத்தில் குறிப்பிடப்படும் அளவைக்காட்டிலும் தற்சமயம் கூடுதலான அகலத்தில் விரிவாக்கம்/வளர்ச்சிப்பணிகள் (பேவர் பிளாக்ஸ் நடைபாதை மற்றும் கழிவு நீர், மழைநீர் வடிகால்) போடிநாயக்கனூர் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கூடுதலான வளர்ச்சி மேற்கொள்ளப்பட்ட பகுதிகள் அருகில் உள்ள புல எண்.146 ஆகும். புல எண் 148 நகராட்சி சந்து – புல எண் 146–ல் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் இவற்றை விரிவாக்கம் செய்துள்ளது. புல எண்.146–ல் நகராட்சியால் விரிவாக்கம் செய்யப்பட்ட சிமெண்ட் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் சாக்கடை இவற்றின் நீளம் அகலம், பரப்பளவு முதலான விபரங்களை

எழுத்துப்பூர்வ அறிக்கையாகவும், வரைபட அறிக்கையாகவும் தருவதற்கு நகராட்சியின் நகரமைப்புத்துறை நகரளவரை பணி செய்ய விடாமல் தடை செய்து வருகிறது.

ஆகையால் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் மூலம் குற்றம் சாட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலர்களை விசாரணை மேற்கொண்டு, நகராட்சியால் புல எண்.146–ல் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள சிமெண்ட் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் போன்ற அமைப்புகளின் நீளம், அகலம், பரப்பளவு விபரங்களை எழுத்துப்பூர்வ மற்றும் வரைபட அறிக்கையாக பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**2.** மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவ **24.07.2024** நாளிட்ட கடிதம் மூலம் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் தனது 09.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விபரங்களை தெரிவித்துள்ளார்:–

"The petitioner specifically requested details regarding the length and breadth of the road and drainage located in Town Survey No.146. The petition was duly forwarded to the Town Surveyor on 01/12/2023 for further action. However due to the Makkaludan Mudalvar camp interference within the Municipal limits, the surveyor was unable to proceed with the required survey since the date the file was forwarded.

In the meantime, the petitioner submitted another application under the Right to Information Act (RTI) 2005, requesting similar details. In this application, the petitioner only mentioned the street name. Hence the details of length and breadth of the drain based on the street name was provided to the individual through Engineering section on 28.02.2024. In alignment with the petitioner's specific requests outline, we have taken the necessary steps through surveyor to measure and compile the requested information regarding Town Survey No.146 and furnished the details to the petitioner on 09.08.2024. The above information is respectfully submitted for your records" என தெரிவித்துள்ளார்.

**4.** மனுதாரர் திரு. G.செந்தில்குமார் அவர்களையும் மற்றும் எதிர்மனுதாரரான போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை **18.09.2024** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ **30.08.2024** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5.** மனுதாரர் திரு.G.செந்தில்குமார் **18.09.2024** ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

சுப்பா நாயக்கர் கீழ சந்து (என்ற) மன்னர் திருமலை சந்து நகராட்சி சந்தாகும். இந்த சந்துப்பகுதி நகர புல வரைபடத்தில் குறிப்பிடப்படும் அளவைக்காட்டிலும் தற்சமயம் கூடுதலான அகலத்தில் விரிவாக்கம்/வளர்ச்சிப்பணிகள் (பேவர் பிளாக்ஸ் நடைபாதை மற்றும் கழிவுநீர் & மழைநீர் வடிகால்) போடிநாயக்கனூர் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கூடுதலான

வளர்ச்சி மேற்கொள்ளப்பட்ட பகுதிகள் அருகில் உள்ள புல எண்.146 ஆகும். புல எண்.148 நகராட்சி சந்து புல எண்.146–ல் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் இவற்றை விரிவாக்கம் செய்துள்ளது. புல எண்.146–ல் நகராட்சியால் விரிவாக்கம் செய்யப்பட்ட சிமெண்ட் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் சாக்கடை இவற்றின் நீளம், அகலம், பரப்பளவு முதலான விவரங்களை எழுத்துபூர்வ அறிக்கையாகவும், வரைபட அறிக்கையாகவும் தருவதற்கு நகராட்சியின் நகரமைப்புத்துறை நகரளவரை பணி செய்யவிடாமல் தடை செய்து வருகிறது. எனவே குற்றம் சாட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலர்களை விசாரணை மேற்கொண்டு நகராட்சியால் புல எண்.146–ல் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள சிமெண்ட் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் போன்ற அமைப்புகளின் நீளம், அகலம், பரப்பளவு விவரங்களை எழுத்துப்பூர்வ மற்றும் வரைபட அறிக்கையாக பெற்றுத்தருமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இன்று 18.09.2024 இம்முறைமன்ற நடுவத்தில் நேரில் ஆஜராகி கீழ்க்கண்ட எனது கோரிக்கைகளை இம்முறைமன்ற நடுவத்தின் முன் வைக்கிறேன்:

புல எண்.146–க்கு கட்டுப்பட்ட சொத்தான தாய் ஸ்தலம் தேவாங்கர் ஜாதிப்பொதுமை வணிக வளாகத்தின் அமைவிடம், தலா ஒவ்வொரு புலத்திலும் அதன் நீளம், அகலம், பரப்பளவு உள்ளதை புல வரைபடத்தில் குறியீடு செய்யக்கோருகிறேன். மாவட்ட ஆட்சியரின் உத்தரவால் 11.80 மீ ஆனது 9.80 மீ என புல எண்.145/5க்கு மட்டுமே பொருந்தும். புல எண்.145/1 என்பதன் நீளம் 11.80 மீட்டரே ஆகும். 11.80 மீட்டரில் 2 மீட்டர் கட்டுமானம் என்பது தாய் ஸ்தலம் தேவாங்கர் ஜாதிப்பொதுமை வணிக வளாகமே அமைந்துள்ளது. அதற்கான ஆவணங்களும் என்னால் இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பு –4ல் விளக்கங்களுடன் இணைத்துள்ளேன். ஆகையால் மேற்காணும் வணிக வளாகக் கட்டுமானத்திற்கான நோட்டீசில் புல எண்.145/5–ஐ சேர்த்தே குறிப்பிட்டே நோட்டீசு வழங்க உத்தரவிட வேண்டும்.

1) என்னால் குற்றம் சாட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலர்கள் விசாரணை செய்யப்பட வேண்டும்.
2) நகராட்சியால் புல எண்.146–ல் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள சிமெண்ட் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் போன்ற அமைப்புகளின் நீளம், அகலம், பரப்பளவு விவரங்களை எழுத்துபூர்வ மற்றும் வரைபட அறிக்கையாக பெற்றுத்தர வேண்டுகிறேன்.
3) புல எண்.145/5–ல் கட்டப்பட்டுள்ள 2.40 மீட்டர் கட்டுமானத்திற்கான மேற்கு புறமுள்ள கடையின் சொத்துவரி விதிப்பை ரத்து செய்ய வேண்டுகிறேன்.
4) மேற்காணும் விவரங்களை உதவி இயக்குநர் (சர்வே), தேனி அவர்கள் மூலம் உண்மையைக்கண்டறிந்து பெற்றுத்தர கோருகிறேன் எனதெரிவித்துள்ளார்.

6) போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் 18.09.2024 அன்று நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை தெரிவித்துள்ளார்.

திரு.செந்தில்குமார் என்பவர் 01.12.2023–ம் தேதிய கடிதத்தில் ஆணையாளருக்கு நகரளவு எண்.146–ல் நகராட்சியால் அமைக்கப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் விபரம் கோரியிருந்தார். அதன்படி மேற்கண்ட மனுவிற்கு நகர சார் ஆய்வருக்கு அளவீடு செய்து குறிப்பு பெற கோப்பு

அனுப்பப்பட்டது. இந்நிலையில் மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெற்று வந்ததால் நகர சார் ஆய்வர் மேற்கண்ட மனுவிற்கு குறிப்பு பெற முடியவில்லை. அதற்கிடையில் திரு.செந்தில்குமார் என்பவர் 30.01.2024ம் தேதியன்று தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் மேற்கண்ட தகவலை நகரளவு எண் குறிப்பிடாமல் தெரு பெயர் மட்டும் குறிப்பிட்டு விபரம் கேட்டதால் பொறியியல் பிரிவு மூலம் அளவீடு செய்து மனுதாரருக்கு 28.02.2024ம் தேதி தகவல் வழங்கப்பட்டது. மேலும் உள்ளாட்சி நடுவர் மன்றம் மூலம் மேற்கண்ட திரு.செந்தில்குமார் மனு 01.12.2023ம் தேதிய மனுவிற்கு மனுதாரருக்கு தகவல் வழங்கி பின்பு அறிக்கையினை 15 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அதன்படி தற்போதுள்ள நகர சார் ஆய்வர் மூலம் அளவீடு செய்து மனுதாரருக்கு 09.08.2024 அன்று தகவல் வழங்கப்பட்டுள்ளது. பின்பு அதற்கான அறிக்கையை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மன்றத்திற்கு 09.08.2024 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரரான திரு.செந்தில்குமார் என்பவர் போடி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு எண்.146–ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுமாறு சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.12845/22 என்ற வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கில் 23.06.2022ம் தேதியன்று மேற்கண்ட நகரளவு எண்.146–ல் ஆக்கிரமிப்பு ஏதுமிருப்பின் அதனை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பின்னர் மனுதாரர் மேற்கண்ட தீர்ப்பின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார். (Cont.P(MD) No.398/2023) மேற்படி வழக்கு 17.10.2023 தேதியன்று நடைபெற்ற விசாரணையில் நகரளவு எண்.146–ல் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் அளவீடு செய்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் மாவட்ட வருவாய் அலுவலர், உதவி இயக்குநர்(சர்வே), வட்டாட்சியர், போடிநாயக்கனூர் அனைவரும் அளவீடு செய்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னர் 02.11.2023ம் தேதியன்று மனுதாரர் கூறியபடி ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையிலும் அளவீடு செய்யப்பட்டதில் மனுதாரர் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் உள்ள அளவுகளின்படி மனுதாரர் இடமான நகரளவு எண்.145/5–ல் கிழமேல் அளவு 11.80 மீ என்பதை 9.80 மீ ஆக குறைத்து 15.02.2024ம் தேதி நகரளவு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தில் முன்பு 18.09.2024 அன்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் ஆஜராகி சமர்ப்பிக்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது மனுவில் சுப்பா நாயக்கர் கீழ சந்து என்ற மன்னர் திருமலை சந்து நகராட்சி சந்தாகும் எனவும் இந்த சந்துப்பகுதி நகர புல வரைபடத்தில் குறிப்பிடப்படும் அளவைக்காட்டிலும் தற்சமயம் கூடுதலான அகலத்தில் விரிவாக்கம்/வளர்ச்சிப்பணிகள் (பேவர் பிளாக்ஸ், நடைபாதை மற்றும் கழிவுநீர் & மழைநீர் வடிகால்) போடி நாயக்கனூர் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது

என்றும், இந்தக்கூடுதலான வளர்ச்சி மேற்கொள்ளப்பட்ட பகுதிகள் அருகில் உள்ள புல எண்.148 நகராட்சி சந்து – புல எண்.146–ல் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் இவற்றை விரிவாக்கம் செய்துள்ளது எனவும், புல எண்.146–ல் நகராட்சியால் விரிவாக்கம் செய்யப்பட்ட சிமெண்ட் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் சாக்கடை இவற்றின் நீளம் அகலம், பரப்பளவு முதலான விபரங்களை எழுத்துப்பூர்வ அறிக்கை மற்றும் வரைபட அறிக்கையாகவும் போடிநாயக்கனூர் நகராட்சியிடமிருந்து பெற்றுத் தரும்படி வேண்டியுள்ளார்.

மனுதாரரின் 30.01.2024 நாளிட்ட மனுவினை நகராட்சியில் பெற்ற சமயம் மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெற்று வந்ததால் மனுதாரர் கோரிய விபரங்களை பொறியியல் பிரிவு மூலமாக அளவீடு செய்து 28.02.2024 அன்று மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் தகவல் வழங்கப்பட்டது. மேலும் மனுதாரர் 01.12.2023ம் தேதிய மனுவிற்கு தற்போதுள்ள நகர சார் ஆய்வர் மூலம் அளவீடு செய்து மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் உரிய தகவலை 09.08.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

மேலும் மனுதாரரான திரு.G.செந்தில்குமார் அவர்கள் போடி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு எண்.146–ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுமாறு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.12845/22 என்ற வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கில் 23.06.2022ம் தேதியன்று மேற்கண்ட நகரளவு எண்.146–ல் ஆக்கிரமிப்பு ஏதுமிருப்பின் அதனை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதையும், பின்னர் மனுதாரர் மேற்கண்ட தீர்ப்பின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டு (Contpt.MDU) No.398/2023), மேற்படி வழக்கு 17.10.2023 தேதியன்று நடைபெற்ற விசாரணையில் நகரளவு எண்146–ல் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் அளவீடு செய்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் மாவட்ட வருவாய் அலுவலர், உதவி இயக்குநர்(சர்வே), வட்டாட்சியர், போடிநாயக்கனூர் அனைவரும் அளவீடு செய்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் 02.11.2023ம் தேதியன்று மனுதாரர் கூறியபடி ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்ற விவரம் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையிலும் அளவீடு செய்யப்பட்டதில் மனுதாரர் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் உள்ள அளவுகளின்படி மனுதாரர் இடமான நகரளவு எண்.145/5–ல் கிழமேல் அளவு 11.80 மீட்டர் என்பதை 9.80 மீட்டர் ஆக குறைத்து 15.02.2024ம் தேதி நகரளவு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

இந்நேர்வில் மனுதாரரது புகார் தொடர்பாக மாண்பமை உயர்நீதிமன்றத்தில் , W.P.(MD) No.12845/22 மற்றும் Cont.P(MD) No.398/2023 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுஅவ்வழக்கின் உத்தரவின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் மாவட்ட வருவாய் அலுவலர், உதவி இயக்குநர் (சர்வே) ஆகியோர் மேற்கண்ட புலத்தினை அளவீடு செய்து அகற்ற கூடிய ஆக்கிரமிப்புகள் ஏதும் அப்புலத்தில் இல்லை என்று மாவட்ட ஆட்சியர் நிலை அறிக்கை தாக்கல் செய்ததின் அடிப்படையில் மனுதாரர் கூறியபடி ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என மாண்பமை

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 22–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.G.செந்தில்குமார்
த/பெ.D.காந்தி, 27/15, தேவிராஜ் இல்லம்,
நந்தவனம் 2–வது தெரு,
போடிநாயக்கனூர்.தேனி மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
போடிநாயக்கனூர் நகராட்சி, போடிநாயக்கனூர்.
தேனி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/10/24

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)